தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: 5 திகதி: 20/06/2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. பிரியதர்சினி பாஸ்கரதேவன்
செல்வி. க. விக்னேஸ்வரன்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**பின்வரும் பந்தியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

## சேர் ஐசாக் நியூற்றன்

இங்கிலாந்திலே ஊல்ஸ்தோப் எனும் கிராமத்திலே அப்பிள் மரங்கள் நிறைந்த தோட்டமொன்று இருந்தது. அக்கிராமத்தில் வசித்த ஆங்கில இளைஞன் ஒருவன் ஒரு நாள் அத்தோட்டத்தின் மர நிழலில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கி இருந்தான். அப்பொழுது அப்பிள் பழமொன்று அவனருகில் விழுந்தது. அது அவனது சிந்தனையைத் தூண்டியது. பழமும் ஏனைய பொருட்களும் கீழ் நோக்கி விழுவதேன்? என்ற அவனது கேள்விக்கு விடைகாண பல ஆராய்ச்சிகளை செய்து புவியீர்ப்பு விசையை (Gravitational Force) கண்டறிந்தான். அவனே ஐசாக் நியூற்றன் எனும் விஞ்ஞானி.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டாம் ஆண்டு நியூற்றன் பிறந்தார். இளமைப் பருவத்தில் அவர் காற்றாடி, நீர்க் கடிகாரம் போன்றவற்றை உருவாக்கினார். அவரது ஆர்வத்தைக் கண்டு கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் சேர்த்தனர். நியூற்றன் தனது இருபத்திரண்டாவது வயதில் பட்டதாரி ஆனார்.

அவர் புவியீர்ப்பு விசையை கண்டறிந்ததுடன் சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு என்பதையும் காட்டினார்.

நியூற்றன் தற்பெருமை இல்லாதவர். அதனால் தமக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகளை (scientists) போற்றினார்.

1. நியூற்றன் எங்கே வாழ்ந்தார்? (2 புள்ளிகள்)

___

நியூற்றன் முதலில் எதனைக் கண்டு பிடித்தார்? (2 புள்ளிகள்)

___

2. நியூற்றன் எப்போது பிறந்தார்? (4 புள்ளிகள்)

______________________________________________________________________

3. நியூற்றனிடம் காணப்பட்ட சிறந்த குணமொன்றைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

______________________________________________________________________

4. நியூற்றன் இளமையாக இருந்த போது உருவாக்கிய இரு பொருட்களை எழுதுக. (4 புள்ளிகள்)

______________________________________________________________________

______________________________________________________________________

5. பின்வரும் எண்களை இலக்கங்களில் எழுதுக : (4 புள்ளிகள்)

இருபத்திரண்டு : ______________________________________________

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டு :____________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

- ஆலயம் : ______________________________
- ஆண்டு : ______________________________
- மகன் : ______________________________
- ஆரம்பம் : ______________________________
- தினம் : ______________________________

2. **பின்வரும் வாக்கியங்களில் 'படி' என்ற சொல்லை பொருத்தமான காலத்திற்கு மாற்றி எழுதுக.** (5 புள்ளிகள்)

- நான் நாளை : ______________________________
- தம்பி நேற்று : ______________________________
- வாணி இப்போது : ______________________________
- கண்ணனும் காந்தனும் நேற்று : ______________________________
- நாங்கள் நாளை : ______________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.** (5 புள்ளிகள்)

- மா + காய் : ________________
- கருமை + கல் : ________________
- நாள் + காட்டி : ________________
- ஐந்து + நூறு : ________________
- பூ + சோலை : ________________

2. **பின்வரும் வசனங்களில் அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிந்து அடிக்கோடிடுக.** (5 புள்ளிகள்)

- இராவணன் தனது தவப்பயனால் சிவபெருமானிடம் இருந்து ________________ (வாழ் / வால் / வாள்) ஒன்றினைப் பெற்றான்.
- கோயில் மணி ________________ (ஒலி / ஒழி / ஒளி) ஊரெங்கும் கேட்டது.
- காட்டுத் தீயினால் பல உயிரினங்கள் ________________ (அழிந்து / அலிந்து / அளிந்து) போயின.
- கிளி மாம்பழத்தினை தன் ________________ (அழகு / அளகு / அலகு) இனால் கொத்தி உண்டது.
- வாகனப் புகை காரணமாக ________________ (வலி / வழி / வளி) மாசடைகின்றது.

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் தொழில் காரணமாக அமையும் பெயர்களைத் தருக.**

உதாரணம்: நாடகங்களில் நடிப்பவர் : <u>நடிகர்</u> (5 புள்ளிகள்)

- கப்பல் ஓட்டுபவர் : ______________________
- ஆடுகளை மேய்ப்பவர் : ______________________
- விமானம் ஓட்டுபவர் : ______________________
- மரவேலை செய்பவர் : ______________________
- மருத்துவம் பார்ப்பவர்: ______________________

2. **இராமாயணத்தில் இடம்பெறும் பின்வரும் கதாபாத்திரங்களை இனம் கண்டு பெயர்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

- இராமனின் தம்பி, அண்ணன் காட்டிற்கு சென்றதால் அண்ணனின் பாதுகையை சிம்மாசனத்தில் வைத்து ஆட்சி செய்தவன்

  ______________________

- உடற்பலம் மிக்க வீரன், சிவபக்தன், ஒரு தீவின் அரசனாக இருந்தவன், இராமனால் கொல்லப்பட்டவன்

  ______________________

- கைகேகியிடம் தீய எண்ணங்களை புகுத்தி, இராமனை காட்டுக்கு அனுப்பக் காரணமான கைகேகியின் தோழி

  ______________________

- இலங்கை அரசனின் தங்கை, அரக்கர் குலப் பெண், இராமனை மணக்க விரும்பியதால் மூக்கினை இழந்தவள்

  ______________________

- மிதிலை மன்னனான ஜனக மகாராசாவின் மகள், இராமனை மணந்தவள்

  ______________________

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.**

(5 புள்ளிகள்)

- மாகாணம் : ______________________________
- பொருள் : ______________________________
- வருடம் : ______________________________
- கதிரை : ______________________________
- தமிழன் : ______________________________

2. **பின்வரும் நூல்களை எழுதிய சான்றோரின் பெயர்களை தெரிவுசெய்து எழுதுக.** (5 புள்ளிகள்)

(சுப்ரமணிய பாரதியார், ஔவையார், திருவள்ளுவர், கம்பர், இளங்கோ அடிகள்)

- இராமாயணம் : ______________________________
- திருக்குறள் : ______________________________
- பாஞ்சாலி சபதம் : ______________________________
- சிலப்பதிகாரம் : ______________________________
- ஆத்திசூடி : ______________________________

BLANK PAGE

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல்.**

உமது நண்பருக்கு, உமது பிறந்த நாள் விழாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்து கடிதம் எழுதுக.

இவ்விழா எப்போது? எங்கே? என்ன நேரம்? கொண்டாடப்படும் என்பது பற்றி குறிப்பிடப்படல் வேண்டும்.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்.**

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 15 வசனங்கள் எழுதுக.

- தமிழ் வளர்த்த பெரியார்
- தமிழ்ப் பாடசாலையில் அண்மையில் கொண்டாடப்பட்ட கலைவிழா
- அன்னையர் தினம்